**அமெரிக்காவின் மசசூசட்ஸ் மாநிலத்தின் பொஸ்டன் நகரத்தில் இருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபையின் தலைவரினால் யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் ஆளுநர் சபைகளின் தலைவருக்கு ஜனவரி மாதம் 5ஆம் திகதி அன்று மின்னஞ்சல் வாயிலாக ஆங்கில மொழியில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் தமிழாக்கம்.**

ரிச்சார்ட் எச். ஹுலியட், தலைவர்

ஜனவரி 5, 2017

மின்னஞ்சல் ஊடாக

அதி வணக்கத்துக்குரிய கலாநிதி டானியல் தியாகராஜா
தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுநர் சபை
தலைவர், உடுவில் மகளிர் கல்லூரி ஆளுநர் சபை

பேராயர் தியாகராஜா அவர்களுக்கு:

யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபை சார்பாகவும், அந்தச் சபையின் தலைவர் என்ற வகையிலும் நான், யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் ஆளுநர் சபைகளின் தலைவர் என்ற வகையில் உங்களுக்கு இந்தக் கடித்தத்தினை எழுதுகிறேன். இந்தக் கடிதத்தினை இரண்டு பாடசாலைகளின் ஆளுநர் சபைகளின் அனைத்து உறுப்பினர்களிடமும் தயவு செய்து பகிரவும். அவ்வாறு செய்வதன் மூலமாக நாங்கள் இந்தக் கடிதத்தின் மூலமாக உங்களிடம் மேற்கொள்ளும் வேண்டுகோள்களை அவர்கள் ஒவ்வொருவரும் முழுமையாக அறியக் கூடியதாக இருக்கும்.

நீங்கள் அறிந்த பிரகாரம், யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபையானது ஒரு பொது தருமச் சொத்து. எனவே அது நம்பிக்கைச் சொத்துக்குரிய சட்டங்களிலே சொல்லப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்கும் வகையில் பராமரிக்கப்படல் வேண்டும். அவ்வாறான சட்ட நியமங்களின் படி, யாழ்ப்பாணக் கல்லூரி நிதியத்துக்கான தர்மகர்த்தா சபையானது, அதனால் விநியோகிக்கப்படும் நிதி அந்த நிதியினால் நன்மை பெறுவோரினால் பொறுப்பான முறையிலும், பொருத்தமான முறையிலும், அது என்ன நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளது. நாங்கள் ஒரு பொறுப்பான நம்பிக்கைச் சொத்துப் பராமரிப்பாளர்களாகச் செயற்பட வேண்டுமாயின், எம்மிடம் இருந்து நன்மை பெறுவோர், நிதிப் பயன்பாடு பற்றி வெளிப்படையான அறிவித்தல்களை மேற்கொள்ளுபவர்களாகவும், பொறுப்பான நிருவாக நடவடிக்கைகளைப் பின்பற்றுவோராகவும், எங்களுடன் ஒத்துழைப்பான முறையில் கருத்துப்பரிமாறுபவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம்.

இந்த நியமங்களின் அடிப்படையில் நோக்குகையில், நாங்கள் யாழ்ப்பாணக் கல்லூரியிடமும், உடுவில் மகளிர் கல்லூரியிடமும் கேட்டுகொண்ட விடயங்களில், மிகக் குறைந்த பட்சமான முறையிலே செயற்படுகின்ற அல்லது எமது கோரிக்கைகளை முற்றுமுழுவதும் புறக்கணிக்கும் விதமான ஒரு போக்கிலேயே நிதிப்பயன்பாடு எவ்வாறு மேற்கொள்ளப்பட்டது என்பது

தொடர்பாக இப்பாடசாலைகளினால் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்கான ஒடிட் செய்யப்பட்ட கணக்கறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு இரண்டு பாடசாலைகளும் தவறி இருக்கின்றன. அதே போல, 2014ஆம் ஆண்டிலே ஏர்ன்ஸ்ட் அன்ட் யங் என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட தந்திராபோயத் திட்டத்தினை அமுல்படுத்தவும் அவர்கள் தவறி இருக்கிறார்கள்.

மேலும் இரண்டு பாடசாலைகளிலும் பின்பற்றப்படும் நிருவாக நடைமுறைகள் பற்றியும் நாம் கவலையும் குழப்பமும் அடைந்துள்ளோம். இந்த இரண்டு பாடசாலைகளின் ஆளுநர் சபைகளும் ஒரு குறித்த ஒரு குழாமைச் சேர்ந்தோரினால் அதிகளவாக நிரப்பப்பட்டுள்ளது. இதனால் பாடசாலையின் முக்கியமான தரப்புக்களான பெற்றோர், பழையமாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் இந்த ஆளுநர் சபைகளில் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் குறைவாகி இருக்கிறது. மேலும் இரண்டு பாடசாலைகளின் ஆளுநர் சபைகளின் உத்தியோகத்தர்களாக ஒரே அங்கத்தவர்கள் இருப்பதுவும் அதிகாரம் ஆரோக்கியமற்ற வகையில் ஒரு சிலரிடம் குவிக்கப்படும் நிலையினைத் தோற்றுவித்துள்ளது. இந்த நிலை தொடருமாயின் இந்தப் பாடசாலைகளின் கல்வி நோக்கமானது தீவிரமாகப் பாதிக்கப்படக் கூடிய நிலை உருவாகலாம்.

அத்துடன் தர்மகர்த்தா சபையினராகிய எம்முடன், பாடசாலையினதும், மாணவர்களினதும் நலனுக்காக ஆக்கபூர்வமான உரையாடல்களை மேற்கொள்ளுவதற்குப் பதிலாக, பயமுறுத்தும் தொனியிலான கடிதங்களும், பிழையான தகவல்களை உள்ளடக்கும் கடிதங்களுமே எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எம்மால் நியமிக்கப்பட்ட எமது முன்னாள் நிருவாக இயக்குனரும் முறையற்ற வகையிலே நடாத்தப்பட்டிருக்கிறார். மாணவர்களுக்கு எதிரான அதிர்ச்சியூட்டும் வகையிலான வன்முறை பற்றியும், மாணவர்கள் அச்சுறுத்தப்படுவது பற்றியும் எம்மால் அறிய முடிகிறது. கல்விக்காகவும், இலங்கையின் எதிர்காலத் தலைவர்களாக வரக் கூடிய இளம் பிள்ளைகள் மத்தியில் கிறீஸ்தவ விழுமியங்கள் பேணப்படுவதற்காகவும் அர்ப்பணிப்புச் செய்யப்பட்ட நிலையங்களிலும், இடங்களிலும் வன்முறைக்கு எந்த இடமும் இருக்கக் கூடாது.

இந்தப் பாடசாலைகளினைப் பற்றி எம்மைச் சாராத பலரினால் எமக்கு அறியத் தரப்பட்டுள்ள விடயங்கள் எமது உடனடிக் கவனத்தினை ஈர்த்துள்ளன. எங்களுடைய அனுபவத்தின் பிரகாரம், இந்த அறிக்கைகள் நம்பகத் தன்மை மிக்கன எனவும், நம்பிக்கைச் சொத்துப் பராமரிப்பாளர்கள் என்ற வகையில் எமக்கு இருக்கும் கடமைகளுடன் தொடர்பு பட்டனவாக இருப்பதாகவும் நாங்கள் கருதுகிறோம். எனவே எம்மால் இந்த அறிக்கைகளை உதாசீனம் செய்ய முடியாது.

பல்வேறு உள்ளூர் மற்றும் பாடசாலைத் தரப்புக்களுடன்[1] மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களின் மூலமாகப் பெறப்பட்ட பின்வரும் விடயங்களை (கீழே மேற்கோள் காட்டப்பட்ட) எமக்குக் கிடைத்த ஓர் அறிக்கை சாரம்சமாகக் கொண்டிருக்கிறது:

1. யாழ்ப்பாணக் கல்லூரியில் நிலவும் ஒரு தேக்க நிலை. உடுவில் மகளிர் கல்லூரியில் மோசமடைந்து செல்லும் ஒரு நிலை;

[1] கடந்த ஒக்டோபர் 2016இல் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் தரப்புக்களுடனான சந்திப்புக்களின் அடிப்படையில்: யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர்கள் சங்கம், உடுவில் மகளிர் கல்லூரிப் பழைய மாணவர்கள் சங்கம், பல்வேறு கிறீஸ்தவ சமயக் கிளைகளினைச் சேர்ந்த சிரேஷ்ட திருச்சபை அலுவலர்கள், வட மாகாணத்தின் ஆளுநர் மற்றும் வட மாகாணத்தின் கல்வி அமைச்சர்

2. பாடசாலைகளின் ஆசிரியர்கள் அச்சுறுத்தப்படுவதும், அவர்கள் முறையற்ற வகையிலும் நேர்மையற்ற வகையிலும் கையாளப்படுதல்;

3. பாடசாலைகளின் தரத்தில் ஏற்படும் வீழ்ச்சியும், போதிய கல்வித் தகைமைகள் அற்ற ஆசிரியர்களின் நியமனமும்;

4. உடல் ரீதியாக அச்சுறுத்தல்களும், தண்டனை நடவடிக்கைகளும்;

5. எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுப்பட்ட [உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகளின்] மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறை பற்றி எவரும் பொறுப்புக்கூறலுக்கு உடபடுத்தப்படவில்லை;

6. அதிகாரத்தினையும், [எமது] தர்மகர்த்தா சபையினால் வழங்கப்படும் நிதியினையும் முறையற்ற வகையில் பயன்படுத்தலும், அவற்றினைத் துஷ்பிரயோகம் செய்தலும்; மற்றும்

7. பாடசாலைகளின் நலன்களினைக் காட்டிலும் [உங்களுடைய] தனிப்பட நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படல்

உடுவில் மகளிர் கல்லூரியின் பெற்றோர் சங்கத்தினரால், தாமாகவே எமக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் ஒன்றிலே மேற்கூறிய விடயங்களிலே பெரும்பாலானவை தொடர்பாக மேலதிக விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்குறித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், இந்த முறைப்பாடுகளை எமக்குத் தெரிவித்தோர், இந்தப் பாடசாலைகளில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின், கடுமையான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என எமக்கு அழுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறான நடவடிக்கைகளில் ஒன்றாகப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் நிதியினை இடைநிறுத்தும்படியும் அவர்கள் எமக்குச் சொல்லி இருக்கிறார்கள். இந்தப் பாடசாலைகளின் வீழ்ச்சியினைத் தடுத்து நிறுத்தவுதற்குப் பாடசாலைகளின் நிருவாகத்திலே ஏற்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து அவர்கள் திடமாக நம்பும் விடயங்களை நாமும் இப்போது திடமாக நம்புகிறோம். ஒரு கடுமையான நடவடிக்கையினை மேற்கொள்ளும் படியான சிபாரிசு எமக்குப் புதிய விடயமாக இருந்தாலும், தற்போதைய தலைமைத்துவத்தின் பிரச்சினைக்குரியதும், தண்டனை விதிக்கும் இயல்புகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து நாம் கடந்த சில வருடங்களாகவே கேள்விப்பட்டு வந்திருக்கிறோம். அவை எம்மைப் பொறுத்த வரையிலே புதிய விடயங்கள் அல்ல.

இந்த விடயங்கள் தொடர்பாக எமது கரிசனையின் தீவிரத் தன்மையினை வெளிக்காட்டும் வகையில், யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், உடுவில் மகளிர் கல்லூரிக்கும் 2017ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்காக எம்மால் ஒதுக்கப்பட்ட நிதியினை 20%இனால் குறைப்பதற்கான தீர்மானத்தினை நாம் உடனடியாக மேற்கொண்டுள்ளோம். ஒக்டோபர் 2016இல் இடம்பெற்ற வருடாந்த தர்மகர்த்தா சபைக் கூட்டத்திலே, 2013இல் பாடசாலைக்கு முற்தொகையாக வழங்கப்பட்ட 95, 750 அமெரிக்க டொலர்களினை மீளப்பெறும் வகையில், 2017ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணக் கல்லூரி வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடான 369, 985 அமெரிக்க டொலர்களில் இருந்து 15, 000 அமெரிக்க டொலர்கள் கழிக்கப்பட்டு, மீதம் ஒதுக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டத்திலே உடுவில் மகளிர் கல்லூரிக்காக 231, 412 அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டன. தற்போது அமுலுக்கு வந்திருக்கும் 20% வெட்டுக்கு

அமைவாக, 2017ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டுக்காக, 2013 முற்தொகைக் கழிவான $3, 750 அமெரிக்க டொலர்களை $ 73, 997 இலிருந்து நீக்கி, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு 70, 247 அமெரிக்க டொலர்களையும், உடுவில் மகளிர் கல்லூரிக்கு 46, 282.40 அமெரிக்க டொலர்களையும் வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

தர்மகர்த்தா சபையினராகிய நாம் இரண்டு பாடசாலைகளினதும் நிருவாகம் மற்றும் கணக்கு அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பில் (கீழே குறிப்பிட்டுள்ள வகையில்) பாரிய மாற்றங்களினை ஏற்படுத்துமாறு வலியுறுத்துகிறோம். நாம் முன்வைக்கும் மாற்றங்கள் நிருவாகம் மற்றும் அறிவித்தல் போன்ற விடயங்களிலே உலகளாவிய ரீதியில் நல்ல நிலையில் இயங்கும், கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான நிறுவனங்களிலே பேணப்படும் நியமங்களுக்கு அமைவானவை எனவும் இங்கே சுட்டிக்காட்டுகிறோம். அவற்றுள் பின்வரும் விடயங்களும், ஏனைய பல விடயங்களும் அடங்கும்: நிதிகளையும் உள்ளகக் கட்டுப்பாடுகளையும் சுயாதீனமான முறையில் ஒடிட் செய்தல், இயக்குனர்களாகப் பணியாற்றுவோரினை வெளிப்படையான முறையிலும், புத்திசாலித்தனமான முறையிலும் தெரிவு செய்தல், தகுதி மிக்க நிருவாகிகளையும் ஆசிரியர்களையும் நியமித்தல், தமக்கு வேண்டப்பட்டோருக்குச் சலுகைகளை வழங்கும் போக்குகளை நிறுத்துதல், தொடர்புபட்ட தரப்புக்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் பரிமாற்றங்களை வெளிப்படுத்தல், ஆளுநர் சபைகளினதும் குழுக்களினதும் கூட்டங்களை சீரான முறையில் காலந்தவறாது நடத்துதல், அக்கூட்டங்களிலே மேற்கொள்ளப்படும் தீர்மானங்களையும், கலந்துரையாடல்களையும் பொதுமக்கள் பார்வையிடக் கூடிய அறிக்கைகளுக்கூடாக (கூட்ட அறிக்கைகள்) வெளிப்படுத்தல்.

எளிமையாகச் சொன்னால், நல்ல முறையில் இயக்கப்படும் நிறுவனம், திறந்த முறையிலும், வெளிப்படையான முறையிலும், நியாயமான முறையிலும் தனது கருமங்களைச் செய்யும். இந்த விழுமியங்கள் கிறீஸ்தவர்கள் என்ற வகையிலும் நாம் பின்பற்ற வேண்டிய விடயங்களாகவும் அமைகின்றன என்பதனையும் நாம் இங்கு சொல்ல விரும்புகிறோம். இவ்வாறான விழுமியங்களைப் போதிக்கும் பாடசாலைகளே நன்கு கற்றுத் தேர்ந்த பட்டதாரிகளையும், மனத்திடம் படைத்த வளர்ந்தோரினையும், பொது நல நோக்கினை மனத்திலே நிறுத்திய மனிதர்களையும் உருவாக்குகின்றன.

இந்தக் கடிதத்துடன் சேர்க்கப்பட்டுள்ள இணைப்பு A இல் இரண்டு கல்லூரிகளும் தனித்தனியாக எதிர்வரும் 2017ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் கட்டாயமாக அமுல்படுத்த வேண்டிய சில மாற்றங்களை நாம் பட்டியலிட்டிருக்கிறோம். இந்தப் பணிகளை, ஆளுநர் குழுக்களின் தலைவர் என்ற வகையில் உங்களுடைய உதவியுடன், இரண்டு ஆளுநர் சபைகளும் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற வேண்டும் என நாம் முன்மொழிகிறோம்.

எதிர்வரும் மார்ச்சு மாதம் 15ஆம் திகதி அளவில், இணைப்பு A இல் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் குறித்து மாற்றங்களினை ஏற்படுத்துவதில், இரண்டு ஆளுநர் சபைகளும் என்ன நடவடிக்கைகளை அந்தத் திகதி அளவில் செய்திருக்கிறார்கள் என்பது பற்றியும், எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதியில் இந்தப் பணிகள் யாவும் முடிவுறுவதற்கு ஒவ்வொரு ஆளுநர் சபையும் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறார்கள் என்பது பற்றியும் எமக்குக் கடிதம் மூலமாக விரிவாக அறிவிக்கவும். 15ஆம் திகதி மார்ச்சில் எமக்கு அளிக்கப்பட வேண்டிய கடிதத்துடன், 2015ஆம் ஆண்டுக்கான நாம் அனுப்பி வைக்கும் படி முன்னர் கேட்டுக்கொண்ட ஒடிட் செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளும்,

2014ஆம் ஆண்டிலே ஏர்ன்ஸ்ட் அன்ட் யங்கினால் சிபாரிசு செய்யப்பட்ட தந்திரோபாயத் திட்டத்தினை அமுல்படுத்துவதிலே அடையப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த அறிக்கையும் கட்டாயமாக இணைக்கப்படல் வேண்டும். இந்த இரண்டு விடயங்களும் இணைக்கப்பட்ட கடிதம் எமக்கு மார்ச்சு மாதம் 15ஆம் திகதி அளவிலே கிடைக்கப்பெறாவிடின், நாம் 2017ஆம் வருடத்தின் இரண்டாம் காலாண்டுக்காகப் பாடசாலைக்கு ஒதுக்கும் நிதியினைக் குறைக்க முறபடக்கூடும். (இணைப்பு A இல் விளக்கப்பட்டுள்ளது போல) 2016ஆம் ஆண்டுக்கான ஒடிட் செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகள் எதிர்வரும் 2017ஆம் ஆண்டு ஜூன் 30 அளவில் எமக்கு அனுப்பப்படல் வேண்டும்.

இணைப்பு A இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான கடிதம் ஒன்றினை எதிர்வரும் ஜூன் 30 திகதிக்கும் முன்னர் உரிய ஆவணங்களுடன் எமக்கு அனுப்பி வைக்கவும். யாழ்ப்பாணக் கல்லூரியினது அல்லது உடுவில் மகளிர் கல்லூரியினது ஆளுநர் சபையானது (எமக்குத் திருப்தி அளிக்கக் கூடிய வகையில்) நாம் முன்வைத்துள்ள தேவைப்பாடுகளை நிறைவேற்றத் தவறின், 2017ஆம் வருடத்தின் மூன்றாம் காலாண்டுக்காகப் பாடசாலைகளுக்கு நாம் ஒதுக்கும் நிதியிலிருந்து குறிப்பிடத்தக்க தொகையினை நாம்  கழிப்பதற்கு நேரிடும். தேவை ஏற்படின் இந்த நிதிக் குறைப்பானது இரண்டு பாடசாலைகளினாலும் பின்பற்றப்படும் அறிவித்தல் நடவடிக்கைகள், நிருவாகப் போக்குகள், தொடர்பாடற் செயன்முறைகள் என்பவற்றில் ஏற்றுக்கொள்ளத்தக்க முன்னேற்றம் ஏற்படும் வரையிலும் தொடரலாம். நல்ல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு பின்னர் அந்த மாற்றங்கள் திருப்பவும் பின்னடைவான நிலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டிருப்பதாக நாம் அறியப் பெறின் இந்த நிதிக்குறைப்பின் அளவினை நாம் மேலும் அதிகரிக்கவும் நேரிடலாம். இந்த நடைமுறைகள் தொடர்பில் எவ்வாறு பாடசாலைகள் செயற்படுகின்றன என்பது குறித்து தர்மகர்த்தா சபையினராகிய நாம் ஒவ்வொரு காலாண்டுப் பகுதியிலும் தொடர்ச்சியாகக் கண்காணிப்புக்களை மேற்கொள்ள எண்ணியுள்ளோம். பாடசாலை நிருவாகச் செயற்பாடுகளிலும், நிதி தொடர்பான அறிவிப்புக்களை வெளியிடுவதிலும் தொடர்ச்சியான, உயர்வான வெளிப்படைத் தன்மை அவதானிக்கப்படும் தன்மையினைப் பொறுத்தே பாடசாலைகளுக்கு எதிர்காலத்தில் நிதி வழங்குவது தொடர்பான எமது முடிவுகள் அமையும்.

இந்தக் கடிதத்தினை முடிவுக்குக் கொண்டு வரும் தருணத்திலே, யாழ்ப்பாணக் கல்லூரியினதும், உடுவில் மகளிர் கல்லூரியினதும் நலன்கள் தொடர்பில் நாம் கொண்டிருக்கும் பற்றுறுதியினை நாம் மீளவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறோம். நீங்கள் நன்னம்பிக்கையுடன் எம்முடன் இணைந்து தீவிரமாகப் பணியாற்ற முன்னெடுக்கும் முயற்சிகளை நாம் வரவேற்போம். எனினும் யாழ்ப்பாணக் கல்லூரி நிதிகளின் தர்மகர்த்தா சபையினரைப் பொறுத்த வரையில் மாணவர்களின் கல்வியும் அவர்களின் நலன்புரியுமே எமது மிகவும் முக்கியமானதும், உடனடியனாதுமான கரிசனைகள் என்பதனை தயவுசெய்து உங்கள் மனதிலே கொள்ளவும்.

இந்தக் கடிதத்துக்கான உங்களுடைய முதற் கட்டப் பதில் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி அளவிலே கிடைக்கும் என நாம் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

உங்களுக்கு மிகவும் உண்மையுள்ள,

வணக்கத்துக்குரிய ரிச்சார்ட் எச். ஹுலியட்
தலைவர்

**கடிதத்தின் பிரதிகளைப் பெறுவோர்:**

1. முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரன், வடக்கு மாகாண சபை
2. கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, வடக்கு மாகாண சபை
3. விஜுலா அருளானந்தம், உப தலைவர், யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரி ஆளுநர் சபை
4. பற்றீசியா சுணீத்தா ஜெபரட்ணம், அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி
5. டீ. எஸ். சொலமன், அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி
6. ஜூட் சுதர்சன், அதிபர், கிறீஸ்தவ இறையியற் கல்லூரி
7. ரீ. தேவநேசன், தலைவர், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை
8. தர்சன் அம்பலவாணர், நிகழ்ச்சித் திட்ட இயக்குநர், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை
9. சுகாஷ் கனகரட்ணம், யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம்
10. மாணிக்கம் தவயோகராஜா, யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், கொழும்பு
11. முருகேசு புஷ்பராஜா, யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், டொரொன்டோ
12. அன்ரன் கணேசன், யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், இலண்டன்
13. அஜித் எமேர்சன், யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், சிட்னி
14. சபாரட்ணம் ரட்ணகுமார், யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், சிங்கப்பூர்
15. ஜீவனம் வற்சன், உடுவில் மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம், கொழும்பு
16. சுகந்தி அல்போன்சஸ், உடுவில் மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம், டொரொன்டோ
17. ஷர்மிளா ஹரிச்சந்திரா, உடுவில் மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம், சிட்னி
18. கோபிக்கா நிர்மால், உடுவில் மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கம், இலண்டன்
19. அலெக்ஸிஸ் தயாபரன், பெற்றோர் சங்கம், உடுவில் மகளிர் கல்லூரி

## இணைப்பு A

**யாழ்ப்பாணக் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் தனித்தனியாகச் செய்ய வேண்டிய விடயங்கள்:**

1. சர்வதேசக் கணக்காளர் நியமங்களுக்கு அமைவாக, சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற சுயாதீனமான ஓர் ஒடிட்டரினால் ஓடிட் செய்யப்பட்ட, டிசம்பர் 31 ஆம் திகதி 2015 இல் முடிவுற்ற மற்றும் டிசம்பர் 31 ஆம் திகதி 2016 இல் முடிவுற்ற வருடங்களுக்கான கணக்கு அறிக்கைகள். இத்துடன் ஆளுநர் சபைக்கு (ஒடிட் செயன்முறையினது தரம் பற்றிய அவதானங்களையும் கருத்துக்களையும் உள்ளடக்கிய) எழுதப்பட்ட கடிதமும், உள்ளக நிதிக் கட்டுப்பாடுகள் மற்றும் அது தொடர்பான நிருவாக விடயங்கள் தொடர்பாக எழுதப்பட்ட முகாமைத்துவக் கடிதமும் இணைக்கப்படல் வேண்டும்.

2. ஓடிட் குழு ஒன்றினை (நிதியியல் பற்றிய கல்வி அறிவு பெற்ற, சுயாதீனமான, பாடசாலைகளிடம் இருந்து வருமானம் எதனையும் பெறாதவர்களை உள்ளடக்கிய) நிறுவுதல். அத்துடன் ஆளுநர் சபைக்கான பெயர்களைத் தெரிவு செய்வதற்கானதும் நிருவாக நடவடிக்கைகளுக்கானதுமான குழு ஒன்றினை நிறுவுதல்.

3. வெளிப்படையாகப் பொதுவில் பாடசாலையின் பழைய மாணவர்கள், கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்கள், இரண்டு பாடசாலைகளின் நிருவாகிகள் ஆகியோரில் இருந்து எதிர்கால ஆளுநர் சபைகளின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட வேண்டியவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் என்பன குறித்த ஒரு கொள்கைப் பிரகடனத்தினை ஆளுநர் சபைக்கான பெயர்களைத் தெரிவு செய்வதற்கும் நிருவாக நடவடிக்கைகளுக்குமான குழு நிறைவேறுத்தல்.

4. தற்போது பாடசாலைகளின் ஆளுநர் சபைகளில் இருக்கும் ஒவ்வொரு உறுப்பினரதும் உரிய கல்வித் தகைமைகளையும், அனுபவங்களினையும் உள்ளடக்கிய பட்டியல். ஆளுநர் சபையின் உறுப்பினர்கள் ஒருவக்கொருவர் ஏதாவது முறையில் குடும்ப ரீதியிலான உறவுகளைக் கொண்டிருக்கிறார்களா என்பதனையும், ஆளுநர் சபை உறுப்பினராக அவர்கள் ஆற்றும் சேவைகளுக்காக நிதி ரீதியிலான அல்லது வேறு மார்க்கங்களில் ஊதியம் எதனையும் அவர்கள் பெறுகிறார்கள் என்ற விபரங்களும் இந்தப் பட்டியலில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

5. நலன்களுக்கு இடையில் முரண்பாடுகள் (conflict of interest) தொடர்பாக (ஒவ்வொரு உறுப்பினருக்குமான கட்டாயமான வருடாந்த அறிக்கைகள் உள்ளடங்கலான) பாடசாலைகளின் ஆளுநர் குழுக்களில் உறுப்பினர்களாக இருப்பவர்களுக்கான ஒரு கொள்கைப் பிரகடனத்தினை நிறைவேற்றுதல்.

6. ஒவ்வொரு ஆளுநர் சபை உறுப்பினருக்கும் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்கள் பற்றி வருடாந்த வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுதல். (தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல் என்பது, ஆளுநர் சபையில் உறுப்பினராகப் பணியாற்றும் ஒருவர் பாடசாலையில் இருந்து நிதி ரீதியிலான அல்லது தனிப்பட்ட நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுதலுடன் தொடர்புபட்டது. இவ்வாறு நன்மைகளை அவர் பெற்றுக்கொள்ளுவது பாடசாலைக்கான அவரின் சேவைகளுக்கும், அவரின் தனிப்பட்ட நலனுக்கும் இடையில் பிளவுபட்ட விசுவாசம் ஏற்படுவதற்கு வழி வகுக்கும்.)

7. ஆளுநர் சபைகளின் எல்லாக் கூட்டங்களின் அறிக்கைகளும் பொது மக்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் பகிரங்கப்படுத்தப்படல்.

8. பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பான ஆட்சேர்ப்புக் குழு ஒன்றினை நிறுவுதல். இந்தக் குழுவிலே பாடசாலையின் அதிபர், பாடசாலையினைச் சேர்ந்த ஒரு நிருவாகி அல்லது ஒரு சிரேஷ்ட ஆசிரியர், பாடசாலை ஆளுநர் சபையினைச் சேர்ந்த ஓர் உறுப்பினர், பெற்றோர் சங்கத்தின் ஒரு பிரதிநிதி, கல்வி அமைச்சர் போன்ற (அல்லது அவரால் நியமிக்கப்பட்ட கல்வி அமைச்சினைச் சேர்ந்த) ஒரு பொதுக் கல்வி அதிகாரி ஆகியோர் இடம்பெற வேண்டும்.

9. பாடசாலைகளின் நிருவாகம் மற்றும் ஆளுநர் சபை என்பவற்றின் நிருவகிப்புப் பற்றித் தற்போது அமுலில் இருக்கும் ஆட்சி ஆவணங்கள் மற்றும் உப சட்டங்கள் (உறுப்பினர்களின் பதவிக் கால எல்லை தொடர்பாக மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் அவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட்ட ஆவணங்களின்) என்பவற்றின் பிரதிகள்.